செய்தி வெளியீடு எண்: 1094 நாள் : 13.12.2010.

# குறைந்த விலையில் நிலங்களை வாங்கி அதிக விலைக்கு விற்று கோடிக்கணக்கில் இலாபம் ஈட்டுவதாக வெளியிடப்பட்ட தவறான பத்திரிகை செய்திக்கு அரசு மறுப்பு!

இன்று தமிழ் நாளேடு ஒன்று, “ஏழை எளிய விவசாயிகளிடமிருந்து குறைவான விலைக்கு நிலங்களை வாங்கி பன்னாட்டு பணக்கார நிறுவனங்களுக்கு அதிக விலை வைத்து விற்று ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்பவர்களைப் போல கோடிக்கணக்கில் லாபம் ஈட்டுகிறது” என்று கூறி தமிழக அரசின் மீது அவதூறு பரப்பும் தவறான செய்தியை வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் தொழில் தொடங்கும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு குறிப்பாக வெளிநாட்டு தொழில் நிறுவனங்களுக்கு தேவைப்படும் நிலத்தை விற்பனை செய்யாமல் நில உரிமையை தமிழக அரசே வைத்துக்கொண்டு நீண்டகால குத்தகை அடிப்படையில் தொழிற்சாலை தொடங்குவதற்காக மட்டும் நிலம் வழங்கப்படுவது நடைமுறையாக உள்ளது.

1971–ம் ஆண்டு சிப்காட் தொடங்கப்பட்டதிலிருந்து, பயன்பாட்டில் இல்லாத அரசு புறம்போக்கு நிலங்களையே இயன்றவரை தேர்வு செய்து தொழில் வளாகங்களை அமைக்க முனைகிறது. போதுமான அளவு அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கப்பெறாத இனங்களில் அவற்றோடு பயிரிட முடியாததும் சாகுபடிக்கு உதவாததுமான புன்செய் மற்றும் தரிசு நிலங்களை கையகப்படுத்தி தொழில் வளாகங்களை அமைத்து வருகிறது. எந்த நிலையிலும் மதிப்புமிக்க விளை நிலங்கள் சிப்காட் தொழில் வளாகங்களுக்காக கையகப்படுத்தப் படுவதில்லை.

கடந்த 15 ஆண்டுகளில் சிப்காட் தொழில் வளாகங்களுக்காக கையகப்படுத்தப்பட்ட 13,490 ஏக்கர் நிலங்களில் நன்செய் நிலங்கள் 269 ஏக்கர் மட்டுமே. இது கையகப்படுத்தப்பட்ட மொத்த நிலத்தில் 2 விழுக்காடு ஆகும். இவையும் பூஸ்துதியில் விவசாய உபயோகத்திற்கில்லாமல் வீட்டு மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு காலியாக வைக்கப்பட்டிருந்தவையே ஆகும்.

மேலும், கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு இழப்பீட்டுத்தொகையாக சந்தை விலை, வழிகாட்டி மதிப்பு, அப்பகுதியில் நிலவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள வளர்ச்சி போன்ற அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு நில எடுப்பு அலுவலரால் நிர்ணயிக்கப்படும் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும் தொகை போதுமானதாக இல்லை என்று நிலஉரிமையாளர்கள் கருதும் பட்சத்தில் உயர் இழப்பீட்டுத் தொகையினை கோரி பெறுவதற்கும் நில எடுப்புச் சட்டத்தில் வழிவகை உள்ளது.

மேலும், சிப்காட் நிறுவனம் இவ்வாறு கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களை தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு ஏற்ற வகையில், சாலை, மின்சாரம்,

நீர் வழங்கு திட்டம், மழை நீர் வடிகால், தெரு விளக்குகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மிகுந்த பொருட்செலவில் மேற்கொண்டு அவற்றை தொழில் மனைகளாக மேம்படுத்தி தொழில் முனைவோர்களுக்கு இலாப நோக்கின்றி நில இழப்பீடு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிர்வாக செலவினங்களுக்காக செலவிடப்பட்ட தொகையை மட்டுமே கணக்கிட்டு நீண்ட கால குத்தகை முறையில் ஒதுக்கீடு செய்து வருகின்றது. இதில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் நிலங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை அந்நிறுவனங்களே செய்து கொள்ளும்பட்சத்தில் உள்கட்டமைப்பிற்கான தொகையை குறைத்து அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதில் சிப்காட் நிறுவனம் எந்தவிதமான இலாப நோக்கின்றியும், மாநிலத்தில் தொழில்வளர்ச்சி மேம்பட செயலாற்றி வருகின்றது.

இந்நிலையில் இந்த அரசின்மீது பழியைச் சுமத்தவேண்டும் என்பதற்காகவே பொய்யான செய்தியை இட்டுக்கட்டி மக்களை ஏமாற்றுகின்ற செயல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

* * *

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.